25th March 1965]

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : வைகை டாமில் 'ஃபாரஸ்ட் ட்ரெயினிங் ஸ்கூல்' இருக்கிறது. ஏற்கனவே ஃபாரஸ்டராக இருக்கக்கூடியவர்கள் அதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள்.

திரு. எஸ். முருகையன் : ஃபாரஸ்ட் கார்ட்களாக 60 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். ஃபாரஸ்ட் இலாகாவில் வாச்சர்களாக இருப்பவர்கள் யாருக்காவது ப்ரொமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? 9 00 a.m.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இதில் படிக்கிறவர்கள் குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பிறகு ஃபாரஸ்டராகக் கூட வரலாம்.

கனம் சபாநாயகர் : வாச்சர்களாக இருப்பவர்கள் ப்ரமோட் செய்யப்பட்டிருக்கிருர்களா என்று கேட்கிருர்கள்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தக் கணக்கு என்னிடம் இல்லை.

Loan for purchase of Coffee grinding machine

* 332 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government have granted any loan to the Bodinayakanoor Co-operative Stores, Limited, Dindigul, for the purchase and installation of a coffee grinding machine; and

(*b*) if so, whether the grinding machine had been purchased and installed?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :

(அ) ஆம்.

(இ) ஆம்.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

MR. SPEAKER : The calling attention notice under Rule 41 is postponed to tomorrow.

II.—PRESENTATION OF FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளைச் சபைமுன் சமர்ப்பிக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 8 கோடியே 65 லட்சம் ரூபாய் ஆகும். இதில் சுமார் 6 கோடி ரூபாய் ரெவின்யூக் கணக்கில் அடங்கும். துணை மதிப்பீடுகளில் பெரும் பகுதி, பல்